1991 சனவரி 25]

(ஆ) டாக்டர் எம்.ஜி ஆர். மருத்துவப் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

1. திரு. மு. க. ஸ்டாலின்
2. திரு. உ. ரா. வரதராசன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

7. அறிவிப்பு.

கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991 (ஆ.இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

10-25 மணி

8. சட்ட முன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS